**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.40/2025**
**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 – ம் நாள் திங்கள் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **முத்துராமலிங்கம்** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 3 ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 3 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. என்னுடைய ஆதார் அடையாள அட்டை **வா.சா.ஆ 12**
( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேட்டால் ராஜேஸ்வரி என்பவருக்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ராஜேஸ்வரி என்பவர் எந்த வருடம் இறந்தார் என்று கேட்டால் 2021 ம் ஆண்டு இறந்தார்.

ராஜேஸ்வரியின் கணவர் எப்போது இறந்தார் என்று கேட்டால் ராஜேஸ்வரியின் இறப்பிற்கு ஒருவருடத்திற்கு முன்பு இறந்தார். ராஜேஸ்வரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்றால் அவருக்கு குழந்தை இல்லை.

ராஜேஸ்வரியின் கணவருடன் உடன் பிறந்தவர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. ராஜேஸ்வரி கட்டிக்குளத்தில் குடியிருந்து வந்தாரா என்றால் சரிதான்.

வாதிகள் ராஜேஸ்வரிக்கு என்ன உறவுமுறை என்று கேட்டால் அண்ணன் மக்கள். சரண்யா என்பவர் இறந்த ராஜேஸ்வரியின் உடன் பிறந்த சகோதரன் கணேசன் மூத்த மகனின் மனைவி ஆவார்.

மேற்படி வாதிகள் உங்கள் உறவினர்களா என்றால் இல்லை. மேற்படி வாதிகள் என் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நானும் வாதியும் ஒரே சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

-Sd-
District Munsif,
Manamadurai.